# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/எண்.27,தேதி 18.11.2016.

ஐயா,

பொருள்: எண்ணூர் அனல் மின் நிலையம் – செயல்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு – பொறியாளர்கள், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது – பேச்சுவார்த்தையின்றி எடுக்கப்பட்ட முடிவு – தொழிற் சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்திடவும் – விருப்பம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணியிடங்கள் நிரப்பிடவும், ஊர்மாறுதல் வழங்கிடவும் – உரிய உத்தரவு வழங்க வேண்டுதல் – தொடர்பாக.

–

1970ம் ஆண்டு துவங்கப்பட்ட எண்ணூர் அனல் மின் நிலையம் 47 ஆண்டுகள் நிறைவான பணியாற்றி தற்போது இயக்கத்திலிருந்து வாரியத்தால் தன்னிச்சையாக நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் வாரியம் இதுவரை எந்தவிதமான பேச்சு வார்த்தையும் மேற்கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டுவதுடன் வாரியத்தின் தன்னிச்சையான இம்முடிவு வாரியப் பணியாளர்களிடையே மிகுந்த வருத்தத்தையும், மனக்கசப்பையும், தொழில் நல்லுறவுக்கு அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பல்வேறு அச்சங்களும், வதந்திகளும் பணியாளர்களிடையே பரவி வருகிறது.

இந்நிலையில் வாரிய அதிகாரிகள் இது தொடர்பாக எண்ணூர் அனல் மின் நிலையத்தில் சமீபத்தில் ஆய்வு செய்தபோது அங்கு பணிபுரியும் தொழிற்சங்கங்கள் கேட்டுகொண்டும் அவர்களை சந்திக்க அதிகாரிகள் மறுத்துள்ளது நியாயமற்றதாகவும், வாரியத்தின் தொழிலமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

எனவே, வாரியம் உடனடியாக தொழிற்சங்கங்களை அழைத்து பேசி இறுதி முடிவெடுத்திடவும், அதுவரை பொறியாளர்கள், பணியாளர்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படுத்தாமலும், ஊர்மாறுதல்கள் மற்றும் மின்திட்ட பணியிடங்களை நிரப்புவதில் விருப்பம் (option) பெறாமல் முன்னுரிமை கடைபிடிக்காமல் நிர்வாக உத்தரவு என்ற போர்வையில் ஒருதலைபட்சமாக உத்தரவுகள் வழங்காமல் இருக்கவும், குடியிருப்புகளை காலிசெய்ய வற்புறுத்தாமல் இருக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வாரியத்தலைவர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

நகல்

இயக்குனர் / உற்பத்தி / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
இயக்குனர் / நிதி / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
செயலாளர் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தொழில் நல்லுறவு ஆலோசகர் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / எண்ணூார் அனல் மின் நிலையம்.
மேற்பார்வை பொறியாளர் / கொள்முதல் மற்றும் நிர்வாகம் / எண்ணூார் அனல் மின் நிலையம்.
சகோதர தொழிற்சங்கங்கள்.